சீருலவும் புல்லாணித் தெய்வச்சிலைப் பெருமாளென்றுள்
காரிகையா ரதுகேட்டு கைகொட்டி நகைக்கலுற்றார். 37

அச்சணமே மாயவரும் ஆண்டவனைக் கைப்பிடித்து
சிக்கெனவே எழுந்திருந்தார் திகழுமணி பந்தருக்கு. 38

தொண்டர்கள் பல்லாண்டுரைக்கத் துந்துபிவாத் தியமுழங்க
வண்டலர்பூ மழைபொழிய அருந்தவர்கள் கூத்தாட! 39

வானமடைந் தையர்களெல்லாம் மங்களசோ பனம்பாட!
மேனகையூ ருவசியும் மிகுநடன மாடிவர! 40

தும்புரு நாரதர்பாடத் தொகைவெண்சா மரைவீச!
இன்பமுடன் சேனையர்கோ னெச்சரிக்கை என்றுசொல்ல, 41

வந்துமணி பந்தரிலே மணியரவப் பாயலிலே
இந்திரையு மாயவரு மெதிரெதிராய் வீற்றிருந்தார். 42

இருந்தபது மாசனியை எழுந்திரென்று சரசுவதியும்
கரந்தொழுகப் பசுமஞ்சள் காப்பெடுத்துக் கைதொடுத்தாள். 43

ஐய்யனைக்கை கேட்டிரந்து அணையுமஞ்சள் காப்பிடென்னத்
தையலர்கள் நலங்குரைக்க சாமியைக்கை கேட்கலுற்றாள். 44

கைதருவீர்! கைதருவீர்! கமலமலர்க் கைதருவீர்!
நெய்தயிர்பால் திருடியுண்ட நெடியவரைக் கைதருவீர்! 45

வனவேடச் சவரியெச்சில் வாங்கியுண்ட கைதருவீர்!
கனியிடைச் சியர்களாடை களவாண்ட கைதருவீர்! 46

மாவலிபால் வாமனமாய் மண்ணிரந்த கைதருவீர்!
கோவலனுய்ப் பசுமேய்த்துக் கோலெடுத்தக் கைதருவீர்! 47

சதிருடனே விசயனுக்குச் சாரதியாய்த் தேர்நடத்திக்
குதிரைகுளிப் பாட்டிநின்று குரப்பமிடுங் கைதருவீர்! 48

மிதிலையிற்போய் சானகிக்காய் வில்லொடித்தக் கைதருவீர்!
கதவுடனே பொதுவியுறல் கட்டுண்ட கைதருவீர்! 49

கடவுளர்கோ னுடன்பகைத்துக் கற்சுமந்த கைதருவீர் !
புடவியெல்லா முழக்கலப்பை பூண்டமலர்க் கைதருவீர் ! 50

திகிரியுடன் சங்கணிந்த திருவாழிக் கைதருவீர் !
அகிலசரா சரங்களுக்கு அபயமருள் கைதருவீர் ! 51

கருதிமணஞ் செய்தென்னைக் கைப்பிடித்தக் கைதருவீர் !
திருமகளா கியவென்னைத் திரிப்பூட்டுக் கைதருவீர் ! 52

அனலைவலஞ் செய்துபொரி யள்ளியிரைத் தகமகிழ்ந்து
கனகவம்மி மிதிக்கப் பெண்கள் கால்பிடித்தக் கைதருவீர் ! 53

இந்தவகை யிரந்தவட்கு லெச்சையற வலக்கழித்து
நந்தணிந்த பெருமாளும் நற்கரத்தையும் கொடுத்தார் ! 54

பொந்திமலர்ப் பூமகளும் இடைவருந்த வளைபுலம்ப
பந்தமுடன் குனிந்துநின்று பசுமஞ்சட் காப்புமிட்டாள். 55

இட்டபசு மஞ்சள்தன்னை இருகரத்தால் தேய்த்துதிர்த்து
வட்டமுலை யார்கள்சொல்ல மணிமார்பைக் கேட்கலுற்றார். 56

திருவளரு மார்பருள்வீர் ! செழுந்துளப மார்பருள்வீர் !
மருவுகவுத் துவமணிந்த மணிமார்பைத் தான்தருவீர் ! 57

பச்சைமணிப் பலகை யென்னப் பாருலகி லகன்றதென்ன
விச்சையுட்கள மடலெழுது மணிமார் பருள்வீர் ! 58

என்றுமணி மார்பிளந்து இனியமஞ்சட் காப்பணிந்து
கன்றொடுகோ மேய்த்தவனைக் கனிந்துமுக மிரக்கலுற்றார். 59

களங்கமில்லா வொருகோடி கலைபோல் முகமருள்வீர்
நளினமலர்க் குலங்கள்தனை நகைக்குநகை முகமருள்வீர் ! 60

என்றுபல விரந்துமுகத் தினியமஞ்சட் காப்புமிட்டு
தின்றுசக்கு கைத்தமலர்த் துணையடியை யிரக்கலுற்றாள். 61

பையரவில் நின்றுநடம் பணியுமலர்த் தாள்தருவீர்
வெய்யசக டாசுரனை வெகுண்டுதைத்த தாள்தருவீர் ! 62

தாரணியிற் சீதையென்றுந் தன்மனைவி யைத்தேடி
யாரணியந் தனிற்றிரிந்து அலைந்ததிரு தாள்தருவீர் ! 63

இரதபதி தருமருக்கா யேவல்செய்யும் பேராளர்
துரியோதனன் சபையில் தூதுசென்ற தாள்தருவீர்! 64

கட்செவியா கியகணையைக் கர்ணன்விடுத் தெறிபொழுது
அருச்சுனன்தேர் நிலத்தழுந்த வழுத்தியபொற்
[றாள்தருவீர்! 65

மடவியரால் கோவியர்கள் மனைகள்தொறும் சென்று சென்று
குடவெண்ணெ யளைந்துருண்டு கூத்தாடுந் தாள்தருவீர்! 66

நீதிசெறி விஜயனுக்கு விங்கமதாந் தாள்தருவீர்!
சகதேவன் படித்துகட்டித் தளைபூட்டுந் தாள்தருவீர்! 67

இப்படியாய்த் தானிரந்து இனியமஞ்சட் காப்புமிட்டு
கைப்பவள மும்வருந்த கலவைச்சந் தனம்பூசி, 68

கரியமுகில் மெய்யழகில் கண்ணேறு வாராமல்
அரியதிரு வயினிசுற்றி ஆலாத்தி காப்புமிட்டாள். 69

தவளமணிக் கமலத்திலே தாம்பூலஞ் சமர்ப்புவித்து
பவளக்கொடி போற்குனிந்து பாதமலர் வணங்கிநின்றாள். 70

மாதரெலாம் அதுகண்டு மாமகளை வாழ்த்துமென்றார்
சீதரனு முகமலர்ந்து திருமகளை வாழ்த்துமென்றார். 71

வாழிபது மாசனிப்பெண்! வாழித்திருப் பாற்கடற்பெண்!
வாழிஜெக காரணப்பெண்! வாழிபரி பூரணப்பெண்! 72

செங்கமல வாழியெனத் தேவர்பிரான் வாழ்த்துதலும்
எங்கள்பது மாசனியு மெழுந்திருந்தங் கெதிரிருந்தாள். 73

இருந்தவுடன் பெண்களெல்லாம் எம்பெருமா னைத்தொழுது
அருந்ததியாய் இவளுக்குநீ ரந்தநலங் கிடுமென்றார். 74

அப்படியே நல்லதென்று அவள்செய்த முறைப்படிக்கு
செப்பமுடன் நலங்குமிட்டுச் சிந்தைகளி கூர்ந்திருந்தார். 75

வாழிதிருப் புல்லாணி வளர்தெய்வச் சிலைவாழி!
வாழிபது மாசனிப்பெண் வாழி! மறையோர்வாழி!

நித்தியமங் களம்வாழி! நித்தியவெவ் வனிவாழி!
மெத்தையென தாமரைப்பூ மேலிருந்தாள்வாழியதே! 77

(நலங்கு முற்றும்)

DAŚĀVATĀRA-P-PATTU

Edited by

VIḌVĀN. T. KRISHNAMURTHY

Several religions have appeared and flourished from the ancient times in our Tamil land, which has been in existence from pre-historic ages. Of all these religions, 'S'aiva' 'Vaiṣṇava' 'Buddha' & 'Samaṇa' are among the best.

The greatmen who had established these religions, and their followers have accepted one God for each religion. Innumerable poems and works depicting great devotion, have been composed by them. Those poems and works are worthy of critical study by learned people.

Vaiṣṇava religion appeared during the interim period. From time to time several works of the best kind on 'Tirumāl' who is followed as their God by the Vaiṣṇavites, have been composed and studied. 'Bhāgavatam' 'Viṣṇupurāṇam' 'Nālāyira divya prabandam' and 'Rāmāyaṇam' are works which have been written by 'Āḻvārs' with a view to show the greatness of the *avatārs* of Tirumāl and His wonderful acts. Aṣṭa-p-pirabandam composed by Piḷḷai-p-perumāḷayyangār, etc., come under this category.

The Tamil Work "Das'āvatāra-p-pattu" composed by one of the devotees of Tirumāl of the later period, is one among them.

This work narrates the story of the ten *avatārs*, in ten stanzas, with poetic taste and exquisite imagination and offers felicitations and prayers.

The ten *avatārs* are:—

(1) Maccāvatāram (2) Kūrmāvatāram (3) Varāhāvatāram (4) Narasingāvatāram (5) Vāmanāvatāram (6) Paras'urāmāvatāram (7) Rāmāvatāram (8) Balarāmāvatāram (9) Kṛṣṇāvatāram and (10) Kalkyavatāram.

The wonderful acts and greatness of Tirumāl are explained in each *avatār*, in a high and poetic style, with a view to encourage the God-worship by all people.

Descriptions :—In this work we cannot but wonder and praise the ability of the author, who has made his words and matter amply tasteful. The description abounds in imaginative nicety.

Tirumāl's Greatness :—As this work is solely intended to show the greatness of Tirumāl to the world, it may be seen, that he has been praised and offered felicitations in each poem.

The fact that all poems have been composed with beautiful rhyme, is a special feature of this work. Nothing is known about the author of this beautiful work, composed in the best poetic order. The author is beyond doubt a great person, who was full of wisdom, and love. In this copy, all the ten stanzas are available.

This is described under D. No. 1758 of the Descriptive Catalogue of this Library.

—

தசாவதாரப் பத்து

"தசாவதாரப்பத்து", என்னுமிச் செந்தமிழ் நூல், பிற்காலத்தில் தோன்றிய திருமாலடியவரொருவராலியற்றப் பட்டதாகும். இந் நூல், ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களின் வரலாற்றினையும், பத்துச் செய்யுட்களின் கண்ணே, சுருக்கமாகக் கூறி, வாழ்த்தி வணங்குவதாகும்.

நூற்பொருள்:—மச்சாவதாரத்தில், திருமாலானவர், இந்திரன், தேவர் முதலியோரின் துன்பந்துடைத்தற்கென, மச்சவுருவெடுத்துச் சென்று, சாகர மறைந்த சோமுகவசுரனை வதைத்தனர் என்பதும்; **கூர்மாவதாரத்தில்,** இந்திரன், வானவர், முதலியோர் வெள்ளைவாரணம், கற்பகத்தரு முதலியவற்றாநய பயன்களை, எப்போதும் பெறுவதற்கென, பாற்கடலானது, வாசுகியைக் கயிறாகவும், மந்தரமலையை மத்தாகவும் கொண்டு, கடையப்படும்பொழுது, மலையானது கீழே அழுந்திவிடாதபடி, மாலானவர் ஆமையுருக் கொண்டு சென்று, அதனைத் தம் முதுகின்மேற் றாங்கினர், என்பதும்; **வராகாவதாரத்தில்,** இரணியாட்சன் என்னும் அரக்கன், இவ்வுலகினை ஓர்பாயாகச்சுருட்டி, எடுத்துக் கொண்டு, பாதாளத்தினையடைந்தபொழுது, விஷ்ணுவானவர், வராகவுருவெடுத்துச் சென்று, இமைப்பொழுதில், அவனை வதைத்துக் கொன்று, மீட்டும் இவ்வுலகினை நிலை செய்து காத்தனர் என்பதும் **நரசிங்காவதாரத்தில்,** இரணியவசுரனது, நாவைப் பிளப்பதற்கு, இரணியன், 'நாராயணனுவான் றூணினுமுளனோ' வெனக்கேட்டு, 'உள'னெனப் பதில் பெற்று, றூணினைக் காலாலுதைக்க றூணிடத்திருந்து, மாலானவர், நரசிங்கவுருவில் வெளிவந்து, அவனைக் கிழித்துக் கொன்றனர், என்பதும்; **வாமனவதாரத்தில்,** மாவலி என்னும் அரசனொருவன், உலக முழுவதையும், தன் ஒரு குடைக்கீழ் வசப்படுத்தற்கு வேண்டும் யாகத்தினைச் செய்யுங்கால், அவன்பாற் குறள்வடிவினராகச் சென்ற நாராயணனானவர், தன் பாதத்தால் மூன்றடி நிலத்தினை மட்டும் தானமாகத் தரல் வேண்டும், என்றிறைஞ்ச, அவனதற்குட்பட, இறைவனானவர் பேருருவெடுத்து, விண்ணையும் மண்ணையும் ஈரடியாக அளந்து, மூன்றாமடியாக, அவன்றன்றலைமேல் தன்பாதத்தினை வைத்தழுத்தி, அவனைப்பாதாளஞ் சேர்த்தினர், என்பதும்; **பரசுராமாவதாரத்தில்,**

பகவானுனவர், சமதக்கினி முனிவர்க்கும் ரேணுகைக்கும் புத்திரனுய்ப் பிறந்து, தன் தந்தையைக் கொன்ற கார்த்த வீரியார்ச்சுனன் என்பான்- தன்மணிமுடி, துணியும்படிச்செய்து, அவன் தன் சென்னிறக் குருதி யினுல், தன் தந்தைக்குரிய கடன்களைச் செயது, சிரஞ்சீவியானுர், என்பதும்; **இராமாவதாரத்தில்,** மாலானவர் அயோத்தியின் கண், தசரதமகாராசனுக்கு மகனுய்ப் பிறந்து, சீதையை மணந்து, பின் இராவணனது மணிமுடி பத்தினையும், ஒரு எளிய அம்பினுல், அழித்தார், என்பதும்; **பலராமாவதாரத்தில்,** விஷ்ணுவானவர் தேவகியின் உதிரத்திற் றங்கி, உரோகிணி நாளிலே, அழகிய புத்திரனுகப் பிறந்து, ரேவதியை மணந்து, பின் உலகம் புகழும் மலாயுதமேந்தினுர், என்பதும்; **கிருஷ்ணுவதாரத்தில்,** நாராயணனுனவர், நந்தனுக்கும் யசோதைக்கும் மகவாகி, பால், வெண்ணெய், தயிர் முதலியவற்றினை மனை தோறும் திருடி உண்டு, கம்சன் முதலிய அரக்கர்களைக் கொன்று, பாரதப் போரினை வெற்றிபெற நடாத்தி, இவ்வவனியின்பாரத்தினை நீக்கினுர், என்பதும்; **கற்கியவதாரத்தில்,** நான்காம் யுகமாகிய, கலியுக முடிவின்போது, திருமாலானவர், தமிழ் நாட்டிடத்து, சம்பளப்பதி என்னும் ஊரில், விட்டுணுச்சருமனெனப்படும் அந்தணனெருவனுக்கு அரு மகவாகி, வெள்ளைப் பரியுருவெடுத்து வந்து, நீசர்களை அழித்தார், என்பதும்; இந்நூலின்கண் கூறப்படும் அரிய செய்திகளாம்.

வருணனைகள்:—இந் நூலின்கண் 'தத்துதரங்க மிரங்கி நெருங் குஞ்சாகரம்', 'மாமணி நேர்பெறு செங்கட்பிறைவாய் மச்சம்', 'மீன்றி- கழ் வானள வோங்கிய சீர்வடவேங்கடம்' எனவரும் பகுதிகள் அறிந்து மகிழ்தற்குரியன. நரசிங்காவதாரத்தில், திருமாலின் சிறப்புக்களை வருணிக்குமிடத்திலும், கற்கியாவதாரத்தில், கலியுகத்தின் தன்மைகளை வருணிக்குமிடத்திலும், ஆசிரியர் முன்னிலும் உயர்ந்து காணப்- படுகிறுர்.

செய்யுட்கள் யாவும் இனிய சந்த அமைப்புடன் அமைக்கப்பட்டிருத்தல், இந்நூலின் தனிச் சிறப்பெனலாம். இந்நூலினை இயற்றினுர் யாவரெனத்தெரியவில்லை. இது இந்நூல்நிலையத் தமிழ் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 1758 ஆம் எண்ணிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டது.

வித்துவான். த. கிருட்டினமூர்த்தி.

தசாவதாரப் பத்து

—(0)—

மச்சாவதாரம்

1. தாமரை மலர்மீ துறையும் விதியின்
சதுர்வே தந்திருடி(த்)
தத்து தரங்க மிரங்கி நெருங்குஞ்
சாகர மதின்மறையுஞ்
சோமுக வசுரன் றன்னை வதைக்க(த்)
துங்கமி குங்கங்கை(த்)
துறைசேர் வைவச் சுதமனு வர்க்கிய(ந்)
தோயக் கரமதனில்
மாமணி நேர்பெறு செங்கட் பிறைவாய்
மச்சத் திருவுருவாய்
வந்தொரு நொடியினி லிந்திர னிமையோர்
வாழ்வுத ருந்தேவே!
வீமணி லங்கிய பொற்புய மீதில்
விளங்கிய கருமுகிலே!
மீன்றிகழ் வானள வோங்கிய சீர்வட
வேங்கட மாதவனே!!

கூர்மாவதாரம்

2. சந்திர னிந்திரை யைந்தரு வெள்ளைத்
தஃதி இரண்டுநீத
தருசிந் தாமணி திகழிந் திராணி
தருக்க முதிவையெல்லாம்
இந்திர னந்தணர் வானவர் தானவ
ரெல்லோ ரும்பெறவே
எண்ணிப் பார்க்கடல் நண்ணிக் கடசேவி
யிறையைக் கயிராக்கி
மந்தர மலைதனை மத்தென நாட்டி
மதிக்க கிழாழ்வளர்
மோட்டா மையுருக் கோடு தாங்கிய
மாவே யெனையாள்வாய்

விந்தை விளங்கிய பஞ்சா யுதனே!
வேதாந் தப்பொருளே!
மீன்றிகழ் வானன வோங்கிய சீர்வட
வேங்கட மாதவனே!!

வராகாவதாரம்

3. பரவிய உலகமனைத் தையொரு பொற்பாய்
பொற்போற் கண்ணன்
படியச் செய்து சுருட்டிக் கொண்டே
பாதா ளஞ்சேரனுள்
மருவளர் மங்கை யனுசியில் நின்றொரு
வடகயி லைக்கிணையாய்
வரகுறு மாதி வராக உருக்கோடு
வாரு திற்றுள்ளி
ஒருநொ டிதனில் வனஞ்ச வதைத்தே
யுலகினை நிலைசெய்தே
யும்பர் வணங்கப் புகழ்தர வோங்கு
முலாவிய தனிமுதலே!
விரகறு மாலிலை மீதில் விளங்கிய
வேதாந் தப்பொருளே!
மீன்றிகழ் வானள வோங்கிய சீர்வட
வேங்கட மாதவனே!!

நரசிங்காவதாரம்

4. ஆணவ மிஞ்சிய யிரணிய வசுர
நாக்கைப் பிளந்திடவே
அரணிக் கன்னே ரு......ம்பிற் மலர்தன்
னணிநா ருயணனே!
காண நினைக்கச் சொல்ல வணங்கக்
காரண னனுரேணு
காஷ்டந் தோறு முறைசூட் சியதாகிய
காரண னேனவ்வனித்
தூணினு முளனோ வெனஉள னென்னத்
தூணி லறைந்திடவே
தூணி லிருந்தொரு நரசிங் கமதாய்த்
தோன்றிய தனிமுதலே!

வேணுவை நேர்புய திருவிக் கரமனே!
விண்ணோர் பணிபதனே!!
மீன்றிகழ் வானள வோங்கிய சீர்வட
வேங்கட மாதவனே!!

வாமனவதாரம்

5. தரைமுழு துந்தன் வசமே யாகத்
தானவர் வானவர்கள்
தன்னடி பரவ நினைத்தே யாகந்
தான்புரி மாபெலிபால்
ஒருகுற ளாகிச் சென்றேன் காலாலுயர்
மூன்றடி நிலம் நீயுதவென
உதவல் தவிர்த்திடும் வெள்ளியி
னொருக்கண் குருடாக்கி
இருநிலம் வானிலம் மீரடி யாய்கொண்
டிசையோ ரடிமுடிமீ
திட்ட வனைப்பா தாளத் திற்கிறை
இட்ட புருதனனே
விரைகமழ் பச்சைத் துவணி புயனே!
விண்ணவர் நாயகனே!!
மீன்றிகழ் வானள வோங்கிய சீர்வட
வேங்கட மாதவனே!!

பரசுராமாவதாரம்

6. இசைபெறு சமதக் கினிமுனி ரேணுகை
இனிய தபோபலனு
லெழில்பெ(ரு)[று] புத்திர னுக வுதித்தே
யெதுகுல வா[ரி]சாகி
வசைபெறு கார்த்திகை யார்ச்சுன னுயிரம்
வாகட விதுணிய
மணிமுடி துணியவ் வனத்தில் முழுது
மறலிக் கிறையாக்கித்
திறைமுழு துந்தன் வசமே யாக்கிச்
சென்னிற ....தனிற்
சீர்பெரு தந்தைக் கடன்பல செய்து
சிரஞ்சீ வியதாகி

விசையம் விளங்கிய மழுவா யுதன்
வினைதீர்த் தெனையாள்வாய்!
மீன்றிகழ் வானள வோங்கிய சீர்வட
வேங்கட மாதவனே!!

இராமாவதாரம்

7. தண்ணார் பாற்கடல் நீங்கி யயோத்தித்
தசரத மகராசன்
தன்சுத னாகி விரோத மிகுந்திடு
தாடகை யைக்கொன்றே
பெண்ணோர் பாகன் சிலையை வளைத்தே
பேர்பெ(ரு)[று] சனகன்கு(வ)[ல]
பெண்ணமு தாகுஞ் சீதையை வதுவை
பெருமை யுடன்செய்தே
நண்ணார் கண்ட கனாகில் ராவண
நளிர்மணி முடிபத்தும்
நடுவறு வரமுங் கிளையுஞ் செல்வமும்
நகைபெறு மொருகணையால்
விண்ணோர் மாதவம் துயரமு மகன்றிட
விடுவிக் கிறராமா!
மீன்றிகழ் வானள வோங்கிய சீர்வட
வேங்கட மாதவனே!!

பலராமாவதாரம்

8. சீதள மதிநிகர் வதனவி ராம்பிடி
தேவகி யுதரத்திற்
சின்னாள் தங்கி யுரோணி யத்திற்
சித்தை களிப்பாகிக்
காதினி லோர்குண் டலமு பாலெழில்
காட்டுந் திருவுருவுங்
கவின்பெறு புத்திர னாக வுதித்த
காயா மலர்வண்ணன்
மாதய வாகிய முன்னோ னாகியு
மகிழ்நீ லாம்பரமும்
வாகுட னணியுந் துங்கா ரேவதி
மருவிய மணவாளா!

மேதினி புகழும் மலாயுத மேந்தி
மிகுன் றிடு பலராமா!
மீன் றிகழ் வானள வோங்கிய சீர்வட
வேங்கட மாதவனே !!

கிருஷ்ணுவதாரம்

9. சீல மிகுந்திடு நந்தன் கோதை
செழித்திடு சுதனெனவே
தீம்பால் வெண்ணேகள் நெய்தயி ருகத்
திருமனே தோறுமிள
தலநிகர்த் திடுகஞ் சனேமுதலா
மசுரரை வதைசெய்தே
யர்ச்சுன னுக்குயர் சாரதி யாகி
யடம்பெறு பாரதமாங்
கோல நடாத்தி மகாமுடி மன்னர்
குலமுழு துஞ்சாடி
குற்ற மிலாத்து ரோபதை நெஞ்சிற்
குறைக ளெலாந்தீர
வேலைகள் சூழும் பூதல பாரின்
விரோதந் தீர்த்தோனே!
மீன் றிகழ் வானள வோங்கிய சீர்வட
வேங்கட மாதவனே !!

கற்கியவதாரம்

10. கள்ளத் தனமிகு லோபற் கிசையுங்
கசடற வேநன் னூல்
கற்ரு ராய்ந்துயர் மேலோர்க் கிழிவுங்
கர்சுக் காசைதரும்
வள்ளத் தனமே கதியென வீணர்
மதித்துங் கனயோக
வலேயிற் சிக்கிய நாலாம் யுகமென
வருகலி யுகமுடிவிற்
தள்ளற் கரிய பெரும்புகழ் சேருந்
தாம்பர பொருனேமிகுந்
தமிழ்நா டதனிடை யந்தண ஞெருவன்
றனேய னெனப்பரவும்

வெள்ளைப் பரியுரு வெனவரு மாலே!
வேதாந் தப்பொருளே!!
மீன்றிகழ் வானள வோங்கிய சீர்வட
வேங்கட மாதவனே!!

—(o)—

தசாவதாரப்பத்து முற்றும்.

—:o:—

NAMMĀḺVĀR PRABANDAṄGAḺ

Edited by

VIDVĀN. T. KRISHNAMURTHY

This collection of work, called, "Nammāḻvār-Prabandaṅgaḷ" means Prabandams sung on Nammāḻvār. This collection contains, three small works, named, "Nammāḻvār Tirukkōlakkavi," "Āḻvār Tiruvanandal," & "Nammāḻvār Padam". These three were written by three different authors whose names are not known. However, it is a fact that these are unique in their meaning and composition. Though there are several other works such as, "Nammāḻvār Tudi," "Parāṅkus'a Nāṭakam" and "Āḻvār Uṟcavappāṭṭu" on Nammāḻvār whose original name is 'Māṟan', this work also equally spreads his fame.

These small 'Prabandams' contained in this work, though small in size, are larger in their meaning. Though we are unable to know particulars about the authors, who wrote and gave these rare treasures to us, it is certain that they should have been great in their wisdom, life and love of God. The poems written by them are evidences of the same. Nammāḻvār who was a true follower of God, was born in this world, to emancipate the people of this world and preached rare truths. These works help us to know his life and greatness. This edition is based on three manuscripts of this Library bearing R. Nos. 3768, 428 and 5944.

நம்மாழ்வார் பிரபந்தங்கள்

—(o)—

"நம்மாழ்வார் பிரபந்தங்கள்", என்னுமித் தொகுப்பு நூல், நம்மாழ்வார் மேல் பாடப்பட்ட பிரபந்தங்கள், என்னும் பொருள்படுவதாகும். இத் தொகுப்பினுள், நம்மாழ்வார் திருக் கோலக் கவி, ஆழ்வார் திருவனந்தல், நம்மாழ்வார் பதம் என்னும் மூன்று சிறிய நூல்களடங்கியுள்ளன. இவை மூன்றும், பெயரறிய முடியாத வெவ்வேறு ஆசிரியர் மூவரா-லியற்றப்பட்டனவாகும். எனினும், கருத்தானும், செய்யு ளமைப்பானும், இவை, தனிச் சிறப்படைகின்றன வென்பது மட்டில் ஒருதலை. பன்னிரு ஆழ்வார்களுள்ளும், தலைமையை யும், பெருமையையுங் கொண்ட நம்மாழ்வாரைப் பற்றிய, நம்மாழ்வார் ஊஞ்சற் கவிதை, நம்மாழ்வார் துதி, பராங்குச - நாடகம் என்னும் வேறு பல நூல்களிருப்பினும், அவற்றை யொப்ப இந் நூல்களும், அவர்தம் புகழைப் பரப்புவதில் முன்னிற்கின்றன.

(i) **நம்மாழ்வார் திருக்கோலக்கவி :—** திருக்குருகூரின் கண்ணே நடக்கும், நம்மாழ்வாருடைய பத்துநாட்களின் திருவிழாச் சிறப்புக்களைப்பற்றி விரிவுபட வெடுத்துக் கூறு மிந்நூல், இருபத்திரண்டு செய்யுட்களானியன்றதாகும். ஒவ் வொரு நாள் திருவிழாவிற்கும் ஆழ்வார் எழுந்தருளுகிற கோலச் சிறப்பை, இஃது நன்கு விளக்கிச் செல்கின்றது. நூலாசிரியர், ஆழ்வாரின் தந்தையார் காரியாரை, 'அரசர்கள் சிரோமணி' என்றும்; ஆழ்வாரை, 'தமிழ்மறை யோராயிரந் - தந்தவர்' என்றும் சிறப்பிக்கிறார்.

'மஞ்சரியுலாவு பொழிற் குருகையூர்', 'அல்லின் வரு முழு மதிய முகத்து மாதர்', எனவரும் அடிகள் ஆசிரியரின் கற் பனைத் திறனைக் கண்ணாடிபோற் காட்டுகின்றன. இந் நூலா சிரியர் நம்மாழ்வாரை, திருமாலின் அவதாரமாகக் கருதாமல், திருமாலாகவே கருதிப் பாடுவதை இந் நூற்குரிய தனிச் சிறப் பெனக் கூறலாம்.

(ii) **ஆழ்வார் திருவனந்தல்:**—இஃது ஆழ்வார் துயில் கொள்வதினிமித்தம், தோழியர்கள் கூடிநின்று, பாடுமுறையி-லமைக்கப்பட்ட ஐந்து செய்யுட்களையுடைய நூலாகும். இதனைத் தாலாட்டு வகையைச் சார்ந்த நூலாகக் கொள்வதுந் தகும். "செண்பகச் சடகோபனே திருவனந்தலோ", என்பதை மகுடமாக வைத்துப் பாடப்பட்டுள்ளது. இதனுள், அரியை வணங்கும் வைணவ அடியார்கள், இவ் வாழ்வார் தஞ் சன்னதியினின்று, இவரையே யேத்திப் புகழ்கின்றனர், என்று கூறப்படுங் கருத்துச் சிறப்புடையதாகும்.

(iii) **நம்மாழ்வார் பதம்:**—இந்நூல், நம்மாழ்வார் பெரு-மையை, இசைப் பாடல்களின் வாயிலாய் வெளிப்படுத்து கின்றது. மொத்தம் ஐந்து பாடல்களைக் கொண்டது. 'மன்னு மிசைத்தமிழ் வண்சடகோப'ரின் பாதபங்கயமே தமக்குத் தஞ்சமென்றும், கருக்குள் புகுந்து வந்துந் தம்மைக் காக்க வேண்டுமென்றும், பிறவிவினை போக்க வேண்டுமென்றும் ஆசிரியர் இறைஞ்சிக் கூறுங் கூற்றுக்கள் கற்பாருளத்தைக் கரைக்குந்தன்மை வாய்ந்தனவாம். இசையொடு சேர்த்துப் பாடுதற்கு இந்நூற் பாடல்கள் மிகவுமேற்றன.

இத் தொகுப்பினுளடங்கிய, பிரபந்தங்கள் அளவாற் சிறியனவாயினும், பொருளாற் பெரியனவாகும். இவற்றை இயற்றியளித்த ஆசிரியர்களைப்பற்றிய குறிப்புக்களை நாமறிய வொண்ணுவிடினும், அன்னோர் அறிவாலும், கடவுட் பற்றாலும் மிகச் சிறந்தோராயிருத்தல் வேண்டுமென்பதுமட்டில் தேற்றம். கடவுளடியாராகிய நம்மாழ்வார், இவ்வுலகினர் உய்யவேண்டி, இவ்வுலகின்கண் வந்தவதரித்து, அரியவுண்மைகளை யெடுத்-துபதேசித்துச் சென்றார். அவர் தம் வரலாற்றையும், சிறப்பையும் அறிதற்கு இந்நூல்கள் துணைபுரிகின்றன. இவை முறையே இந்நூல் நிலைய மூவருடக் காட்டலாக்கு 3768, 428, 5944 ஆகிய எண்களிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டன.

இங்ஙனம்,

வித்துவான். த. கிருட்டின மூர்த்தி.

நம்மாழ்வார் பிரபந்தங்கள்

(1) நம்மாழ்வார் திருக்கோலக்கவி

கடவுள் வாழ்த்து

1. நாரா யணன்ருள் மிசைவேத
நான்குந் தமிழா யுரைசெய்து
பாரார் துயர்தீர்த் தருள்மாறன்
பரனத் தியயனத் திருநாளில்
நேரா யணிந்த திருக்கோல
நிகழ்த்துங் கவிகள் தமைப்பாடக்
காரார் கருணை மதுரகவி
கமலம் புரையுங் கழல்துதிப்பாம்.

திருக்கோலங் கொண்டருளுகின்ற திருநாட்கவி

2. அஞ்சலென வடியவரை யாள வேண்டி
யரசர்கள் சிரோமணி யாங்காரி ராசன்
தஞ்சிறுவ னெனவுலகில் வந்து தோன்றுந்
தமிழ்மறையோ ராயிரமு மருளி யாங்கு
மஞ்சரி யுலாவு பொழிற் குருகை யூரில்
மால்கொளுமார் சாரங்க மொடுமருவு மாறன்
செஞ்சரணந் தொழுமடியார் தம்மை நாளுந்
தெரிசிப்பார் தாளெனது சிரம்வைத் தேனே.

பல்லக்கில் திருக்கோலம்

3. மல்லிகையு முல்லையொடு மருவு வாச
மதுநிறைந்த வகுளமு மென்குழலிற் சூட்டி
யல்லின்வரு முழுமதிய முகத்து மாத
ரரும்பரத நடனமிட விசைகள் பாடச்
சொல்லியம்பு மறைத்தமிழ்தே றடியர் தாமுஞ்
சூழ்ந்திறைஞ்ச ராசாங்கந் தோன்ற வேளை
வெல்லவுந்தன் வடிவுகொடு சிவிகை மீது
மேவுமகிழ் மாறனடி விரும்பி னேனே.

இரண்டாந் திருநாள்

4. வண்ணமுகில் நிறமுடைய குழலை முடித்த
தண்மிசைப் பன்மலர்கள் சூடிப்
பண்ணுதவு குழலினிசை யமுதமென
யிருசெவியிற் பாய மாதர்
எண்ணரிய மயலையுற வானிரையுங்
கூடி நிறைந்திட வெய்துங்
கண்ணனென வுருவெடுத்த சடகோபன்
மலரடியைக் கருதி னேனே.

5. இளமுறுவல் நிலவுதவு மாயர் மாத
ரினியசிறு புதல்வரொடு மிளங்கன் றோடுங்
குளிர்திரண நிறைபுனற்றில் விளையாட் டோடுங்
குலவுபொழு தவையிடத்தே வருமோர் கன்றை
களவுகொடு மேதிருறுவல் விளவின் மீதே
கனிசிதற வெறிந்துகந்த கண்ணன் போல
வளர்கனக சிவிகைதனில் அழகோ டார்ந்த
மகிழ்மாறன் மலரடியை வணங்கி னேனே.

மூன்றாந் திருநாள்

6. தாதுலவு துளபமுடி மாய னடியார்
கலியாற்ற வித்தி டாமல்
ஓதுமிய லாலவனை யடைகு வதுவழி
யெனவே யுரைக்கப் பூவின்
மீதுவளப் புதுவை யின்வந் துலகமெலா
விளங்கவொரு விளக்காய்த் தோன்றுங்
கோதைவடி வெடுத்த மகிழ்மா றனிரும்
புகழைநிதங் கூறு நாவே.

7. முருகவிழு நவமலர்கள் குழலிற் சூட்டி
முகமதியிற் கத்தூரித் திலதந் தீட்டி
பெருகயிசை யமுதுபயில் யாழின் மீட்டி
யுல்லாச மோகினிபோற் கோலங் காட்டி
யருகில்வரு மடியவர்கள் மனிதர் வானில்
அமரர்கடன் மனதுமப கரிக்க வோங்கு
வருகனகச் சிவிகைதனில் அழகோ டார்ந்த
மகிழ்மாறன் மலரடியை வணங்கி னேனே.

நான்காந் திருநாள்

8\. தடமுடைய மடுவிலொரு மலையை நொந்து
சகலபுவி மானிடர்க்கும் வினையோ வென்ன
விடமுடைய காளிய னதுடல் நோவ
விரைகமழு மதுத்துளப மாலை யாடத்
திடமுடைய நடனமிடு கண்ணன் போல
சிறந்ததிரு வுருவெடுத்துக் குருகை யூரில்
மடமுடைய மகளிர்மன முருகத் தோன்று
மகிழ்மாறன் மலரடியை வணங்கி னேனே.

9\. கானகத்தி னிசிசான்ற னேவ லாலே
கபடமா ரீசனொரு மானுய்த் தோன்றி
தேனுலவு மலர்க்கூந்தற் சானகிக் காக
தேடு வதுபோற் சிலதூர மேகி
யூனணுகி யுயிர்கவரும் வாளி யாலே
அங்குட னலறிவிழ விடுத்தரா மன்போல
வானளவும் பன்னகப்பொற் சிவிகை மீது
வந்தசட கோபனடி வணங்கி னேனே.

ஐந்தாந் திருநாள்

10\. ஆயர்பா லருடனண்ணி யேயாவி னங்களை
மேய்த்தி டும்போ திலே
தீயமாதுல னேவலினல் வஞ்சஞ் செய்ய
வந்தசிறைப் புள்ளை யங்கையால்
வாயையீர் பிளவாக நொடிக்குளே வகிர்ந்த
மாயவன் கண்ணனைப் போல
தூய பங்கய மாமுகந் தோன்றவே
தோன்றுநஞ் சடகோபனைப் போற்றுவாம்.

11\. பாழுடல் கொளநிசி சார்க்கினி யுருமற்
பாதலத்திற் புரந்தானை யொத்து நாளும்
வாழுமெங்கள் தயாதரன்பால் வந்து தோன்றி
மாதவர்கள் துயர்களைந்து வருமோர் நாளில்
ஏழுமா மூடுருவக் கணையொன் றேட்டி
யினியகவிக் கருளியவில் லாளன் போலே
சூழுநவ மணிசிறந்த சிவிகைமீது தோன்று
மகிழ்மா றனைத்தாள் துதித்திட் டேனே.

ஆறுந் திருநாள்

12. புடைய மாமலை யம்பாம் வானொடு
மடையவே முன்வி ழுங்கினன் வேறொரு
புதுமையாகிய வுந்தியினன் முகவிறை யோனை
அடவிலே தருமங்கள் ரூபனல் விமல
னீடிய பங்கய லோசன னருள்செய
நாரண னெம்பெருமான் வடிவ மலேசன்
மடுவி லோர்கரி நொந்தழை போதினில்
வினதை செயனிரு மம்புய மீதினில்
வரையெனுமு னெழுந்தரு ளரவதி னிடர்தீர
முடுகியாழியை யுந்திய சீதர னுருவுபோலே
வடிவங் கொடுதே ரணியு முருகரு
வகுளம் புனைமா தவர்பெரு மானே.

13. இருகையினு நவநீத மேந்தியாய ரினிய
பலசே ரியிலும் புகுந்து மாதர்
பொருகயற்க ணெஞ்சம் வரிவளியுஞ் சேரப்
பொருப்பினுற் கவருமெங்கள் மாயன் போலே
குருகையிற் பைந்தொடியர் கள்நடன மாடக்
குலவுநவ மணிசிறந்த சிவிகை மீதே
வரும்வகுள மணிமாறன் றனை வாழ்த்துதும்
வைணவர்தன் றுள்தலைமேல் வைத்திட் டேனே.

ஏழாந் திருநாள்

14. முருந்தினிள முறுவல்நகு மாயர் மாதர்
மொய்த்தமலர்த் தலையிலே விளையாட வேண்டிப்
பொருந்திநற் றுகிலனைத்துங் கரைமேல் வைக்கப்
பூவை வண்ண மாயவன்கண் டோங்குங்
குருந்தின்மிசை யேறியவர் வேண்ட வேண்ட
குறுநகைகொண் டயாத கோலம் போலத்
திருந்தியநன் கோலமொடு குருகை யூரில்
சடகோ பனடி சிரம்வைத் தேனே.

15. பத்துடைய வடியவர்க ளவைகண் டோங்கப்
பழகுமிடை யாய்ச்சியர்தம் மனைக்கு ளேகி
சற்றுமனத் திடுக்கமின்றி களவின் மூண்டு
தயிர்நறுநெய் வெண்ணெய் யுண்ட கோதையாலே

மத்துறுபுன் கயிறுகொண்டங் குரலி னேடு
மருங்கிறுகப் பிணிப்புறுமென் மாயன் போற்பொன்
நற்றுமெழிற் சிவிகையினில் வந்து தோன்றும்
நறைவகுள மார்பனைத்தாள் நண்ணி னேனே.

எட்டாந் திருநாள்

16. கொந்துலவு புரிகுழலாள் கோதை யோடுங்
கோடிரவி யொளியைநிகர் கலுழ னேடு
செந்தளிர்க்கை செங்கோலோ டிலக்கை யாளுந்
திறத்தைவெளி யிடுவதுபோற் புதுவை யூரில்
வந்தடியார் விழிகுளிர விளங்கு மேக
மன்னனூர் வடிவிவைகா ணறிவீ ரென்ன
நந்துலவு புனற்குருகை மாறன் தோன்றும்
ரமணீய மாயவர்கொல் நவிலு வாரே.

17. மதிமுகத் தசோதை சிறுமகவ தாகி
வளஞ்சிறந்த வாயர்பக் கல்வளரு நாளில்
புதியபிச்சி மலருநறை பெருகி யாரும்
பூவிலஞ்சித் தொடையுமிதோ புனைவா யென்ன
வதிமகிழ்ச்சி யுடன்பூவை யாச்சிதாவென் றங்கையிற்
கொண்டவை தரிக்கு மாயன் போற்பொன்
பொதியும்வண் ணச்சிவிகையின் மேல்மாறன் தோன்றும்
பொருப்பையலா தெனது நெஞ்சம் புகழ்ந்தி டாதே.

ஒன்பதாந் திருநாள்

18. புரந்தரனுக் கென்றுாயர் பலருங் கூடிப்
பொருந்தியிட்ட பூசைதனிற் குவித்த சோறுந்
தரந்தரமாய்ப் படைத்தகறி நெய்பா லோடு
தயிரனைத்து முண்டுமக பதிதா னேவச்
சொரிந்தமழை யாற்பசுக்கள் கலங்க நாகஞ்
சுமந்துமழை தடுத்துகந்த கண்ணன் போல
நிரந்தபொழிற் குருகையில் வாழ்மாறன் ஞான
நிதம்வணங்கு மாரியாதா ணிணைப்ப தாமே.

19. அலைகடலின் மந்தரத்தை மத்தாய் நாட்டி
அரவுநெடுங் கயிருகக் கடைந்த நாளில்
கொலைதொழில்செய் யசுரர்களு மும்பர் தாமும்
கூடியமர் விளைத்தபொழு தவையின் லோகத்

திலதமென வோர்கொடியி னுருவா யங்கு
செழுமமுத மீய்ந்தருளு மாயன் போலே
யிலகுதோளுக் கினியான மீதா மாற
னிணையடியை மறவாதென் னிதயந் தானே.

பத்தாந் திருநாள்

20. மண்டலமும் வானகமும் மகிழ வோடி
வருமலையின் மணிதிகழ்கா விரியி னூடே
வண்டுலவு சோலைவள ரரங்கமீது வாழு
மழகிய மணவா ளனென வோசை
கொண்டடியார் பரவவெழிற் கோலத் தோடு
குருகையினில் நறைத்தும்பி யிசைவண் டார்ப்ப
விண்டலரும் வகுளமணி மாறன் றேன்றும்
மேல்காண வளரரங்கன் வேணுந் தானே.

21. உம்பர்தொழு மாமய னரவின் மீதே
யொண்ணுதலார் மலர்மடந்தை யிருதாள் பற்ற
நம்புமடி யாரிடர்கள் களைய வேண்டி
ஞானநித் திரைபொருவு மடைவு போல
அம்புவியி லார்ந்தவளக் குருகை யூரில்
அணிரத்தினப் பொற்றகட்டின் மணிகள் சேர்த்துப்
பம்புமொளி சிறந்தவனச் சிவிகை மீது
பராங்குசனூர் வருமழகைப் பரவி னேனே.

பலச்சுருதி

22. செங்கமலத் திருமார்ப னருள்சேர் மாறன்
திருக்கோலங் கொண்டருளுந் திருநாள் தன்னில்
அங்கவன்ற னுதிமுதற் பத்து நாளி
லணிந்தவெழிற் கோலமதி லாசை யாகி
மங்களஞ்சேர் கவிதையென வருகா லைந்து
மணவாள மாமுனிவ னருளாற் சொன்னேன்
இங்கிவற்றைப் படிப்பவர்கள் குருகூர் மாறன்
இணையடிக்கீழ் இடைபிரியா திருப்பர் தாமே.

(2) ஆழ்வார் திருவனந்தல்

1. பொருவரிய தவநிலை புரிந்தரியை வாழ்த்துவோர்
புரவியரி கதிருதய மாகுமுன் குணபாலி
னருணவுத யங்கண்டு தண்பொருநை நீரில்
நீராடி யிசைபாடி நின்சன்னதி யிலேற்றலால்
கருணைமழை பொழிமேக மேதிரு வனந்தலோ!
கமலநய நாரவிந் தாதிரு வனந்தலோ!!
திருவழுதி வளநாட னேதிரு வனந்தலோ!
செண்பகச் சடகோப னேதிரு வனந்தலோ!!

2. காராழி நெடுமுகட் டாயிரங்கதிர் வீசுகடவுள்
குணதிசை யூடுவந் துதித்தது கண்டு
தாரார் நறுங்கமல முகைவிண்டு பொழிநறவு
தனையுண்டு களிவண்டு பண்ணே ழிசைத்தலால்
வீராகப் புனித னேதிரு வனந்தலோ!
மெய்ஞ்ஞான விளைபோத னேதிரு வனந்தலோ!!
சீரார் தமிழ்க்கரச னேதிரு வனந்தலோ!
செண்பகச் சடகோப னேதிரு வனந்தலோ!!

3. தரைமுழுவ தும்பரவ யாழிசங் கேந்துவோர்
தண்புளியில் வீற்றிருந் தெமையெமைப் பாடென்ன
உரைசெய் திருவாய்மொழிப் பனுவல்கேட் டிருபோது
முரகப்புளி துஞ்சாது நின்சரண மேத்தலால்
விரைசொரியும் மகிழ்த்தாம னேதிரு வனந்தலோ!
வேதகீத புலவ னேதிரு வனந்தலோ!!
திரையுலவு பொருநையா றூதிரு வனந்தலோ!
செண்பகச் சடகோப னேதிரு வனந்தலோ!!

4. பிறைகொண்ட கொடுமுடி யழைத்திமைக் குங்கதிர்
பிறங்குநெடு மணிமாட கூடத்தி லுவகையால்
உறைகின்ற கூகைமுத லருணவிழி துஞ்சாம
லுனதுகுரு கூரென்று கூறிநின் றேத்தலால்
மறைதந்த தமிழர் கார்திரு வனந்தலோ!
மகிழுவோன்பதி மாகோ லேதிரு வனந்தலோ!!
திறைவண்டு முரல்தாம னேதிரு வனந்தலோ!
செண்பகச் சடகோப னேதிரு வனந்தலோ!!

5. கொங்கலரு மணிமுறுக் குடையகறை மழைதூவுங்
குமுதமுகை யாகவிது வுடலமும் வெளுப்பவே
சங்கின முழங்கவண் டிசைபாட மயிலேறி
தனதுகொடி யொடுகருங் கொடிபல விசைத்தலால்
நங்கையக மகிழ்மாற னேதிரு வனந்தலோ!
நாவணர் தம்பிரா னேதிரு வனந்தலோ!!
செங்கமல மலராச னேதிரு வனந்தலோ!
செண்பகச் சடகோப னேதிரு வனந்தலோ!!

---

(3) நம்மாழ்வார் பதம்

1. உன்னையல் லாலொரு தெய்வமு மெண்ணுது—நெஞ்சம்
உனக்குண்மை சொன்னேனுக் குன்பாத பங்கயம்
—[நீதஞ்சம்!
கன்னவில் வேளும் வணங்கும்பிர தாபா!
மன்னுமி சைத்தமிழ் வண்சட கோபா!! (உன்னை)

சூரிய மண்டலங் தன்னையே
தாமரை நாடுங் கண்டகாரியஞ் சொன்னேன்
மேகத்தைக் கண்டால் மயிலாடுங் கூரிய வேல்விழி
நங்கைகு மாரா! சீரிய செல்வத் திருக்குரு கூரா!!
(உன்னை)

வங்கமென் றல்லாமற் பொங்கும்பெருங்
கடலெல்லை தனிலெங்குஞ் சென்றாலும்
காத்ததுக் காதர வில்லை செங்கயல் தாவிய
சங்கணி யாரா! கொங்கலர் செண்பக மாரா! நரவீரா!!
(உன்னை)

தென்புகு மூர்முனி செந்தமிழ் சூடிய பாதா!
ஆர்க்குமன் புள்ள காரிகுலத் துதித்தருள் போதா!!
நன்பெரி யோர்தொழு ஞானசொ ரூபா!
இன்ப மாய வாழ்வுத ருஞ்சட கோபா!! • (உன்னை)

மோகனம்

2. நம்பி னேனுனை நம்பினே னய்யா!
அம்புவி தன்னில் வேறே துணையில்லை!!
அணிமகிழ் மாளிகை அரசே! என்சாமி!! (நம்பி)

அடியேன் செய்த குற்றங்களைப் பாராட் டாதே
அப்பா உன்மயக்குத் தின்னமாட் டாதே!
கடிய பிறவிக் கடலில்மூட் டாதே
கண்டகண்ட பேர்கள் கையில்காட் டாதே! (நம்பி)

சிந்தையுன் பாதமல்லால் வேறெண் ணுதே!
தேனையளி வண்டு பூவையுண் ணுதே!!
அந்த கன்று தான்முந்த வொண்ணுதே!
அந்திம காலம் அசட்டை பண்ணுதே!! (நம்பி)

அருட்பெரி யோர்தமக் கன்புள்ள கதியே!
அற்புத மான கிருபைப்பெரு நிதியே!!
திருப்புளிக் கீழ்வளர் கின்றமா நிதியே!
தென்குரு கூர்நங்கை தந்தசந் ததியே!! (நம்பி)

3. மெய்யு ஞானமுத் திரைக்கையுந் துணையாய் வந்து
நானுய் யும்படி யேயருள் செய்யும்
வையம் புகழ்குருகை அய்யன் செண்பக
மாரா மந்தகாச சந்திர விம்ப வதனமும்
வண்டு பாட விண்ட லர்ந்த வகுளமும் (மெய்யு)

தாளும் பரிபுரமும் தோளும் திருமாலையும்
நாளுந் தொடர்ந்தே யென்னை யாளும்
வாளுங் கதையும் வில்லும்நீள் நேமியும்
சங்கும் வைத்திடாத கைத்தலங்க லழகிய
நித்திய வாழ்வு பெற்றுயர்ந்த தேசிகா! (மெய்யு)

பூப்பங் கயம்போற் கண்கள் வாய்ப்புங்
திவ்விய கஸ்தூரிக் காப்பநுதலு மிறுமாப்புங்
கோப்புந் தெய்வங்கட் கெல்லா
மூப்பென் றிருக்கு மாரா! குண்டலங்கள்
கொண்ட சைந்த குழையுங் கொண்டல்போற்
சுருண்டெ ழுந்த குழலும்! (மெய்யு)

கூறு மறைத்தமிழ் நாவீரன் றடம்
பொருநை யாறன் நங்கையார் பெற்றபேர்
மாறன் மலிந்து வளமீறுங் குருகையூரன்

வால சூரிய மண்டலங்கள் வந்து
மெய்ஞ்ஞான ராசியன்பு கொண்டிணங்கிய
[மெய்யுந்தொடி (மெய்யு)

4. உன்னை நம்பின பின்னு முலகி லொருவரை நம்புமோ?
அன்னைமுலை யுண்ணாத அருள்ஞான தேசிகனே!
(உன்னை)

அனத்தில் விரைந்தேறி யோடி வந்து
திருவுளத்தில் ஆனந்த மாகச் செல்வந் தந்து
நிரந்தர மான மனத்தையுன் கோயில்
போனி னைந்து குடியி ருந்தேன்
மலைவெலாந் தீர்க்க வேணும் அறிந்துபெருங்
கவலைதீர்ப் பாயோ? பிறவிவினை போக்காயோ?
கைதந்து கரைசேர்ப் பாயோ? கண்
குளிரப் பார்ப்பாயோ? ஞானதே சிகனே! (உன்னை)

கரும்பு கசக்குமோ? கசக்குமோ வாய்ப்
பொல்லாங்கு சன்னதிக் காகக் கருத்தில்
நினையாது செய்த தீங்கு குற்றஞ் செய்தார்க்கும்
திரும்ப யிரங்குவ தல்லோ பாங்குவந்து வேனே
திருவருள் செய்தேனை கைதாங்கு சந்தம்
வந்து போற்றுவேன் போது மல்லோ?
மாற்றுவேன் மனதை நன்றாய்
தேற்றுவேன் சிந்தையி லிடராற்றுவேன்
ஞானதே சிகனே! (உன்னை)

குருகைப் பதிவாழ் திருவே! தென்சோலை சூழ்
குருகைப்பதி யாள வந்த மருவே!
இகபரமனே! காருணிய குணசீலனே!!
பரமாசன் பரிபாலனே! ஞானதே சிகனே!! (உன்னை)

கல்யாணி

5. பாதார விந்தமெனக் காதாரம்
தாதார் வகுளமாலைச் சடகோப—தேசிகாவுன் (பாதார)

ஆரார் பகை செய்தாலும்
ஆரார் என்னை வைதாலும்
காரார் குழலி யர்கள்
கண்ணம் புகொண் டெய்தாலும் (பாதார)

காசினி மன்னர்முகங்
கடுத்தாலுங் கெடுத்தாலும்
நேசமில் லாதபேர்
முன்னின்று பகையெடுத் தாலும் (பாதார)

முற்றும்!

DŪPĀṬI KAIFIYAT

దూపాటి కైఫీయతు

Edited by Śrimāns

T. SRIDHARA MURTHI

AND

N. SARVESWARA RAO, B. A. (Hons.)

(Continued from Page 90 - Volume XIII, No. 2)

ఆ విలయకాలమందు ఒకదాసీమనిషి ఈ శిశువును దాచుకొని నగరిచుట్టూ ఉన్న ప్రాకారానకు ఉండే గవాక్షిగుండా యెత్తుకొని పోయి తూర్పుకొండవీటిసీమలో వారి రాజబంధువులు రావెళ్లవారు కిలారువారు అనే ఇంటిపేరిటివారు నలభై యిండ్లవారు తాళ్లూరు, తక్కెళ్లపాడు అనే గ్రామములలో ఉండియుండగా అక్కడికి తీసికొని పోయెను. ఇక్కడి నగరిదోపు, పట్టణందోపు యావత్తు కాచేసుకొని యీ వచ్చిన మీర్ఫజురుల్లాఖానుడు అయ్యపరాజు ఇద్దరు ఫంజుతోగూడా తిరిగి తమదేశాలకు పోగలవారై దద్దనాలపట్టణానకు కొంతదూరమందు మజిలీ చేసుకొని దిగి అమీరుఫజురుల్లాఖానునివారు అయ్యపరాజును పిలుపించి నీవు చెప్పినందున మేము ఇంతపని చేస్తిమి కదా! పట్టణందోపు ఎంత అయినది? నగరిదోపు ఎంత అయినది? అని యడిగినంతల్లో పట్టణందోపు శీఘ్రముగా విచారించేటందుకు వ్యవధానంలేదు గనుక విచారించలేదు. నగరిదోపుమాత్రం కొంతమట్టుకు నేను విచారించుకొని జాబితా వ్రాసికొని వచ్చినాను. చూడుమని తనజేబులోఉండే కాగిదం చూపించే వరకు ఇనుము ఇత్తడి, రాగి, కంచు, సీసం, తగరం వగైరాలున్ను కొన్నికొన్ని డేరాలు వగైరాలున్ను రంగుదారిబట్టలున్ను గాక బంగారం, వెండి, ముత్యం, వజ్రం, పగడం వగైరాలున్ను కొంత ఖజానాకూడా తొంభైయారు లక్షలవరకు జాబితా వ్రాసియున్నాడు. గనుక ఆ జాబితా అగుపరచినమీదట ఆ తురుష్కునిమనస్సున అత్యంతఆశ్చర్యమున్ను ఈ విష

యానికి ముందు ఏమి విరోధం తెచ్చిపెట్టునో యని అనేకదినములనుంచి వారిసంస్థానంలో జీవించి వారిచోటనే యింతపని నడిపించినవాడు నన్ను అయినా ఈ ప్రకారం చెయ్యగలవాడే కదా! అనే భయంచే తను నీవు స్వామిద్రోహం చేసినవాడవు. మిక్కిలిదినములు ఉండకూడ దని ఆ అయ్యపరాజును అక్కడే శిరచ్ఛేదం చేసి అక్కడనుండి ఫంజును తర్లించుకొని అలాహిదా తన స్థలానకు పొయ్యేమార్గంలో ఈ బ్రాహ్మణుడు తనపట్లను మరేమీ వ్యగ్రతలేకుండా నడచుకొన్నవానిని నిర్హేతుకం చంపినందుకు ఫజురుల్లాఖానునికి ఆకస్మికం శరీరరుగ్మత కన్పించి అతను స్థలానుకు చేరకమునుపే పరలోకగతుడాయెను. అధికారి చనిపోయి నందున ఆ దోచుకొని పోయిన ద్రవ్యం ఎక్కడిది అక్కడ పరులపాలయి నానాముఖాలపోయెను. ఈప్రకారంగా అయిన సమాచారం దక్షిణాది పాళేలమీద దరియాప్తు చేస్తూఉన్న చినవెంకటాద్రినాయుడు వినివచ్చి దద్దనాలపట్టణం ఉండే అరాచికమున్ను తమ నగరు ఉన్నతీరున్ను చక్కగా కన్నులనిండా చూచి తన స్వంతజనం మరెవ్వరు లేకుండా పోయినందుచేతను అంతట నిల్వక వచ్చి ఎరగొండుపాలెంలో వారికి ఇష్టదేవతార్చన అయిన వృశ్చికాలమల్లేశ్వరుని దేవాలయం దగ్గర స్నానంచేసి అనేకదినములనుంచి బహుగొప్పగా నటించిన ఘటాలకు నేటివరకు ఈ ప్రకారం మామీద ఈశ్వరుడు దయతప్పి ఈలాగున స్వరూపనాశనం చేసినమీదను అందరిని పోగొట్టుకొని నేను ఒక్కణ్ణి ఉండి ఎవరిని సంరక్షణ చేయవలసినది! గనుక నేనుకూడ ఈ స్వామి వారిలో ఐక్యం అయిపోవలసినది. అని తన ఆయుధంతో సాహసంచేతను కంఠం త్రుంచుకొని పరలోకగతుడాయెను. అంతట సంస్థానం నిల్చియుండెను. అప్పుడు అధికార్లు లేకపోయినందున ఎక్కడిదేశాలు ఎక్కడసర్కారు అమానీ అయిపోయెను గనుక దూపాటితాలూకా మాత్రం వారి ప్రేష్యం అయిన వ్యవహారస్థులే విచారించుకుంటూ ఉండిరి.

అపుడు శా॥ శ॥ వర్షంబులు 1632 (A. D. 1710) అగునేటి వికృతినామసంవత్సరం తదారభ్యం పది సంవత్సరములు ఈ లాగున

జరిగెను. అపుడు హ॥ ఆసబుజానిజాముల్ ముల్కుగారు గోలుకొండ ప్రభుత్వం చేస్తూ ఉండియున్నంతలో తాళ్లూరు తక్కెళ్లపాడు దగ్గరఉన్న కాయపనాయనిమల్లికార్జుననాయుడు దినదినప్రవర్ధమానుడై కొంచం వ్యక్తుడై యుండెను గనుక అక్కడ ఉన్న రాజబంధువులున్ను కొందరు పూర్వానునుంచి ఉన్న ముస్సర్దీలు, సూరెపల్లెవారు అనేవారున్ను మూల్పూరువారు అనేవారున్ను నియోగులు బ్రాహ్మణులు ఒకరినొకరు కనిపెట్టి యుండిరి. అదివరకు లోవయినం దద్దనాలపట్టణం రాజధానిగా ఉండేదినములలో గుండారంతులపెదఓరుగంటి అనేనామం కలిగిన నియ్యోగి పట్టణం పాడు అయ్యే గడబిడ సమయములో ఆయనకూడా మృతుడు అయ్యేటప్పుడు ఆయనదగ్గర కొన్ని కొన్ని పూర్వపు సనదులు వగైరా కాగిదాలు తనదగ్గర ఉండగా ఆ ఓరిగంటిగారు నష్టమైపోయిన తరువాత ఆయన కుమారుడు చినఓరుగంటి అనే పేరువాడు మూడు సంవత్సరములవాడున్ను తల్లిదండ్రులకు ఏకపుత్రవిషయంగా ఆ చిన్న వాడు ఉండియుండగా ఆ చిన్నవానితల్లిపుట్టినయిల్లు గద్వాల ఆ ప్రాంత్యముల ఉండగా ఈ చిన్నవానిని తీసుకొని తమదగ్గర ఉన్న కాగితాలు తీసుకొనిపోయి పుట్టినయిల్లు చేరెను. ఇంకా జహాగీర్లు వగైరా సన్నదులు తాలూకా సనదు సూత్రాలు దరోబస్తు అన్నీ నగరిలో దస్త్రాలలో ఉండియుండగా ఆ పట్టణం అంతా హలాఖా అయి వారి గృహాలు యావత్తు చిచ్చుపెట్టుకొని ముందు ఇంకా జీవితాపేక్ష లేకుండా పోవటము వల్లను దరోబస్తు కాగదపత్రాలు గృహాలతోకూడా దహనమైపోయి నవి గనుక అప్పటి సనదులు ఏమిన్ని లేకపోయెను. వారు ఎక్కడెక్కడ చేసిన ప్రతిష్ఠలు దేవస్థలాలు వనాంతరాలు చెరువులు ఎక్కడెక్కడ దేశాలలో ఇచ్చిన అగ్రహారాలు దేవబ్రాహ్మణ మాన్యాలు వగైరాలు ఇప్పటికిన్ని కొన్నికొన్ని నడుస్తూనే యున్నవి.

ఈలాగున ఉండియుండగా మల్లికార్జున నాయుడు అనే చిన్న వాడు వ్యక్తుడు అయిన పిమ్మట లోవయినం వెంకటపతినాయనింగారి తమ్ముడు సిద్ధన్నగారు ఉండెను. ఆయన మనుమడు జోగన్నగారు డెబ్భై సంవత్సర ములవాడై యుండి తాతగారి లగాయతు నుంచి తండ్రిగారి మట్టునుంచి

తాము డెబ్భై సంవత్సరములవారయ్యే పర్యంతం బహు స్తబ్ధమార్గంగా ప్రవర్తించడంచేత సర్కారు కార్యకరాలలో ఎవరయిన క్షాత్రవంతులు అయినవారికే పనియిచ్చి వారి జాగ్రతను కనుకొని సర్కారులో పేరు దాఖలా చేస్తూవచ్చినారు.

ఆలాగున ఉన్నప్పటికిన్ని ఇదివరకు గతించినవారు అందరున్ను వీరు పెద్దలు అని పూజ చేసుకుంటూ షోడశోపచారముల నిత్యచర్యలు జరుపుతూ ఎప్పటి సమాచారం అప్పుడు వీరికి యావత్తు శ్రుతపరుస్తూ వ్యవహారరీత్యా తోచని ఆలోచనలకు యోచనలు చేస్తున్న ఈ రీతున బహు గొప్పగా విచారించుకుంటూ ఉండియుండిరి గనుక వీరు ఏ పనులలోకి పోకుండా ఇంటా ముంగిట ఉండే పురాణశ్రుతులు వినుకుంటూ తోచిన మట్టుకు ప్రత్యేకం దానధర్మాలు చేసుకుంటూ ఈలాగున ఉండేయెడల వీరి స్వంతఖర్చు నిమిత్తం దూపాటి తాలూకా పైకి దద్దనాలపట్టణానికి తూర్పున పదహారుక్రోసులమీదను గొబ్బూరు వగైరా కొన్నిగ్రామాదులు విచారించుకుంటూ ఉండేవరకు దైవానుగ్రహం తప్పి కురుక్షేత్రం అయినట్టుగా దద్దనాల కావటమున్ను వీరు వృద్ధులు అయిఉన్నారు గనుక మునుపు వస్తుతః లౌకికం విస్తరించి అనుసరించినవారుకారు గనుక విచారగ్రస్తులై గొబ్బూరునుంచి తూర్పు తాళ్లూరు తక్కెళ్లపాడు పోయి అక్కడఉన్న రాజబంధువులనుచూచి దైవకారుణ్యం ఈ లాగున ఉండి పోయెను గదా! మొదటినుండి మనము ఒకరి సంస్థానం గుత్తైరుగము ఏ రీతున సంరక్షణ చేసినా సర్కారువారే ఆదరువు అయి జరుపుతూఉండి ఉండినారు. అందుకు ఇంత విలయం అయినపనికి మనము ఎవరమున్ను పోయి సర్కారులో చెప్పుకోవటము లేకపోయెను. అందుకు మన సనదు సూత్రాలు ఏమయినా ఆకరం ఉంటే తీసుకొని గోలుకొండకుపోయి ధణీ వారికి దర్శనం అయి మనవి చేసుకొనేయెడలలో ఈ చిన్నవాడైన మల్లికార్జుననాయని చూపించితే ధణీకి దయ వస్తుందని యోచన చేసినంతలో సరేనని అప్పటికి మద్దతునుంచి సంస్థానంలో బహునమ్మకముగా ఉండి దయ సంపాద్యం చేసుకొని అందలం బహుమానం పొంది నెలకు డెబ్భైఅయిదు వరహాలు తవుజీ అనుభవించిన మూలుప్పారు బద్దిరాజు

గారిని ముందుగా గోలుకొండకు ప్రయాణం చేసినమీాదను ఆ వీర్రాజు పోయి సకలవిధముల అమీారు హుమ్మరాఫ్లు మొదలయినవారి దర్శనం చేసికొని శాయపనాయనివారిసంస్థానమునకు వచ్చినఅవస్థ యావత్తు మనవి చేసుకుంటూ కొన్ని దినములుండిన తరువాత నవాబువారి దర్శనం చేసుకొని ఈ వృత్తాంతం సకృచ్ఛం (ఛం?) జ్ఞాపకం చేసుకొనినంతలో బహు అంతఃకరణచేత వెనకటి దినములలో సాళువనాయనివారు చేసిన కార్యాలు వారినుంచి అయినపనులు, బందోబస్తు వారిసమాచారం కొంత గుర్తెరిగే ఉన్నారు గనుక వారివంశాంకురం ఏమయినా ఉంటే పిలుపించుమని హుకుం ఇచ్చినమీాదను ఈ చిటివీర్రాజు మనవి చేసెను గదా!

చినవెంకటాద్రినాయనివారికుమారుడు మల్లికార్జుననాయడు అనే చిన్నవాడున్నాడు. దయచేసి దర్శనానకు రమ్మని శలవు ఫర్మానా వ్రాయించి యిచ్చి అక్కడ నుంచే కొంత గుజ్జం మందిని వెంటయిచ్చి ఈ చిట్టివీర్రాజును శలవు ఇచ్చి పంపించిన తరువాత అక్కడినుంచి ఈ చిట్టివీర్రాజు వచ్చి ఇక్కడ ఉండిన వారికి తను పోయివచ్చిన సమాచారం యావత్తు చెప్పినతదనంతరం అత్యంతసంతోషంచేతను షహరుకు పోవలసిన ప్రయత్నం చేసుకొని అక్కడ ఉన్న నలఖైయిండ్ల రాజ బంధువులనుంచి శాయపనాయనివారి సంస్థానంలోనే జీవనం చేసుకొని యున్నారు గనుక విస్తారం భాగ్యవంతులై యున్నారు గనుకను రెండు మూడువేల వరహాల పర్యంతం ఖర్చుకు తీసుకొని ఒక ఏనుగు అంబారీ తెప్పించుకొని ఆ అంబారీలో మల్లికార్జున నాయని కూర్చుండబెట్టుకొని గణ్యవరంసమత్ వెల్లటూరుసమత్ జహాగీరు అనుభవిస్తూ ఉండి వీరిని హితవిశ్వాసాలతో కనిపెట్టుకొనియుండే రావూరి వెంకటాద్రినాయడు అనే రాజబంధువుడున్ను శాయపనాయని జోగన్నగారికుమాళ్లు చెన్నప్పనాయడు పురుషోత్తంనాయడు వీరిద్దరున్ను తగాయతినుంచి వీరి తాలూకాలోనే దూపాటిసీమలో మొఖాసా పుల్లలచెరువు సమతు అనుభవిస్తూన్ను సర్కారుకార్యకరములలో వీరితోకూడ జంటపడియున్న వెలమవారు కొర్లకుంట తిరుమలప్పనాయడున్ను దూపాటి

తాలూకాలోను శ్రీశైలపర్వతప్రాగ్భాగమందున శాయపనాయని వారిలోనే ముద్దతునుంచి కొన్ని పల్లెలు అనుభవిస్తూ ఉండే బాడవారు నల్లాటివారు పాలకీ బహుమానం పొందినవారు బోడచన్నప్ప నల్లాటి వెంకటపతిన్ని అనేటటువంటి పెదవీటి గొల్లలు మొదలైనవారిని అందరిని స్తోమంచేసుకొని వేయి రెండువేల మందితోకూడా పాలకీలు గుఱ్ఱాలు వగైరా సవారీలతోకూడా షహరుకు పోయి ఒకప్రదేశమందున దిగి హాజరతుగారికి వీరువచ్చిన సమాచారం ఎరుకచేసినమీాదను హాజరతుగారు అనుమానించి శాయపనాయనివారు అందరు దద్దనాలపట్నం హాలా శై నప్పుడు వారి గృహాలతోకూడా లయం అయిపోయినారన్న సంకోచం మనస్సున ఉంచుకొని పరీక్ష పూర్వకముగా వీరిని శైటికి రమ్మని శలవు ఇవ్వడంలో దిడ్డిదర్వాజాను రమ్మని చెప్పిరి గనుక వీరు ఆ మర్మం తెలి యక వారు శలవు ఇచ్చిన దర్వాజా పర్యంతం పోయినంతలో ఈ మల్లి కార్జుననాయడు ఎంత చిన్నవాడైనా గొప్పవారి గర్భవాసమందు ఉత్పత్తి అయినాడు గనుక సంకోచంతోచి ఏనుగు నెక్కి దిడ్డిదర్వాజాను పోవటము మనకు సాంప్రదాయంకాదు. మనమీాద దయవచ్చినప్పుడే మనమున ప్రీతి చేశేరు.

ఇంతటినుంచి తిరిగిపోవలసినదేనని ఆ దర్వాజా దాటిపోక తిరిగి వచ్చి యథాస్థలాన ప్రవేశించేటంతటిలో ధణివారు ఈ సమాచారం విని వారి సొత్తు అయినవాడు గనుకనే మనము చేసిన ఎత్తుకు త్వరపడి నడచినవాడుకాడు అని దయవచ్చి తిరిగి పెద్దదర్వాజాను రమ్మనుమని దివానులను పంపించిరి గనుక మరునాడు సాయంత్రంవేళ పోయి హాజరతు గారి దర్శనం చేసుకొని తమ సమాచారములు యావత్తు పూర్వోత్తర ములు అడిగిన తర్వాత ఈ చిన్నవాడు తేజస్సుకలవాడున్ను దేవాంశ కలవాడున్ను వస్తుతః క్షాత్రవంతుడు అయిన వెంకటాద్రినాయని కుమా రుడు గనక ధణివారిమెదుట కూర్చుండి వారు అడిగినప్రశ్నలకు మరియొకరిని యోచన అడుగక ఉత్తరం చక్కగా ఖామందుతో మనవి చేసినంతలో అత్యంత సంతోషం చేతను చాలదయవచ్చి వీరిదగ్గిర ఉన్న వకీలు దస్తావేజులు మొదలయినవి కొన్నికొన్ని చూపించినందున

చక్కగా విచారించి వినుకొండ మొదలయినదుర్గాలు దేశీలు తాలూకాలు జహగీర్లు వ్రాసియిచ్చి తనదగ్గర మల్లికార్జుననాయని కొన్ని దినములుంచుకొని తర్వాత సెలవుఇచ్చినమీదను వచ్చి అరగొండ పాళెంలో తమలోగిటిలోనే స్థలం బాగుచేయించి అక్కడ నివసించి ఎక్కడెక్కడ తమపెద్దలు సంపాద్యంచేసిన జీవనాలు తాలూకాలు జహగీర్లు రుసుంలు హస్వీళ్లు కనుమలు ఘాట్లు వగైరా చక్కగా విచారణీయం చేసుకొంటూ పెద్దలుచేసిన ప్రతిష్ఠలు దేవస్థలాలు చెరువులు వనాంతరాలు దేవబ్రాహ్మణ అగ్రహారాల ఇనాములు చక్కగా పాలన చేసుకొంటూ వెల్లజెండాలు నౌబత్తు నగారాలతోకూడా పూర్వులవలెనె కితాబులు మొదలయినవి విస్తారం సంపాద్యం చేసుకొని దేవబ్రాహ్మణ భక్తిచేతను ఈలాగున సకలసుఖాలతో ఉంటూ ఉన్నందున దుర్గాలను కూడా ఆధిపత్యం పూర్వులకన్న ఎక్కువపదవి అనుభవించినందున దుర్గాలుఏలినమల్లికార్జుననాయడని జనవాడికె ప్రశస్తమై ఉండినది. ఈప్రకారంగా జరిగించుకుంటూ ఉండేవరకు గోలుకొండకు ఏమో అలజడి ప్రసక్తమై దేశంఅంతా అరాచికంఅయి అక్కడ ఉండే అమీర్లు మొదలైనవారు దేశాలమీద ఎగబడి బహుచరాచూర చేసేసమయమందున విభురాంఖానుడు అనేదుష్టమానసుడు ఖాసా గుజ్జం మందితో కూడా ఈ మల్లికార్జుననాయనివారుండే కసుబా యరగొండుపాళెం మీదికి దండు ఎత్తివచ్చినంతలో అత్యంతమైన యుద్ధంచేసి మొగలాయి ఫంజును చాలా హతంచేసి ఒక ఆవర్తి ఫలాయనం చేసినతరువాత ఆ వచ్చిన ఫంజు సికస్తు అయిపోయి తిరిగి వెంబడిగానే వచ్చి ఆ ఘోరయుద్ధం చేయడంలో మల్లికార్జుననాయడు ఒంటి గుజ్జంతో ఆ యుద్ధమధ్యమందు చాలా యుద్ధంచేసి అలసి బలంచాలక నష్టపడిపోయెను.

అటుమీదట యెరగొండపాళెం దోచుకొని స్త్రీచెర పురుషచెర మొగలయిన దుర్మార్గమున్ను పట్టణం అగ్నితప్తంచేసి ఆ ఇభరాంఖానుడు తిరిగిపోయినాడు. అపుడు శా.శ. వర్షంబులు 1645 (A.D. 1723) అగునేటి శోభకృతునామసంవత్సరంవరకు ఆలాగు జరిగినతరువాత మల్లికార్జుననాయడు సంతానంలేకనే గతించిపోయినాడు. దేశం

అంతా బహుకశ్మలం అయి ఎవరియంతటవారు చేతనయినమట్టుకు పరులు భాగు చేసుకొనిరి గనుక తాలూకాలు వీరి క్రింద ఉండే జాగాలు అన్నీ జప్తీ అయి ఎక్కడి వ్యవహారం అక్కడనే నిలిచిపోయెను.

అప్పటికి పోసగిన కాటకమున్ను రాజవిద్ధూరమున్ను ఈ ప్రకారం ప్రసక్తం అయి బహువిలయకాలం వచ్చె గనుక వీరి నౌకర్లు రాజబంధువులున్ను ఎక్కడివారక్కడనే పోయిరి. ఇది ఒక అవతారసమాప్తి అయినట్లుగానే అయిపోయెను. ఈలాగున కొన్ని దినములు గడచేవరకు ఈ దూపాటితాలూకాను కానాలరెడ్డి అనే పరాయిసంస్థానీకుడు వ్యవహారం చేసుకొంటూ తాను అనుభవిస్తూ ఉండెను. అపుడు ఈ శాయపనాయనివారు ఎవరయినా పోయి హుజూరున చెప్పుకొని బోధించేందుకు క్షాత్రవంతులయినవారు అంతా పోయిరి. తతిమ్మా ఉన్నవారైనా ఏదోపోయి ఒకమార్గం ఏర్పరచుకోవడానకు ఏమి బలంచాలకనో ఆరీతున కొన్ని దినములు జరిగినతరువాత శాయపనాయనిజోగన్నగారి కుమారులు చెన్నప్పనాయడు పురుషోత్తంనాయడు ఇద్దరు వెనుకటి దస్త్రవేజులు ఏమైనా ఉన్నవేమోనని విచారించేవరకు యరగొండుపాళెం దోచుకొని అగ్నితప్తం చేసినసమయంలో ఒకటిఅయినా ఆకరం లేకుండాపోయెను.

ఇకముందు సాధన ఏమి విచారించవలసినది అని వీరు విచారణీయం చేస్తున్నసమయమందు గుండాపణతుల పెదఓరుగంటిగారి మనుమడు శంభుడు అనేనియోగ్యి పూర్వానుండి యీ సంస్థానానికి బాధ్యుడే గనుక గద్వాల రాయదుర్గం ఆ ప్రాంత్యములనుంచి వచ్చేటప్పుడు ఆ కాగిదాలు కొన్ని కొన్ని తీసుక వచ్చినాడు. గనుక ఆ తారకాలు ఈ పైని వ్రాసిన సనదులు వగైరా కొన్నికాగితాలు చెన్నపనాయడు పురుషోత్తమనాయనింగారికి చూపించినంతలో ఈ కాగితాలు తీసుకొని గుండాపణతుల శంభుకు తాము కొర్లకుంటవారు, రావూరువారు, బోడవారు, నల్లాటివారితోకూడ షహరుకు పోయి హాజరతునవాబు సాహేబులవారి దర్శనం చేసుకొని తమ పూర్వోత్తరం యావత్తు మనవిచేసికొని

తమవద్దనున్న పూర్వపుదస్తావేజులు అన్నీ చూపించినంతలో యథా ప్రకారం శలవు ఇవ్వడానకు ఎక్కడెక్కడ దేశాలు అన్నీ అమీనులు హుమ్మరావులకు జహాగీర్లు అయిఉన్నందున ఒట్టుకు సీమలు ఇచ్చే యుక్తం లేదని అపుడు దూపాటి సీమలో దోరణాలసముత్ వగైరా ఏభైయేని మిది గ్రామాదులున్ను దూపాటితాలూకా పైకి మంతనాల కనుమ, చామకనుమనువచ్చే హాస్పీలున్ను కొచ్చెర్లకోటసీమలో కురిచేటి వంటి పదియిర్వాయి గ్రామాదులున్ను ఇవి కొద్దికొద్దిగా పేష్కష్ యేర్ప అచి ఫర్మానా వ్రాసియిచ్చినారు.

అంతట కాలంపిదప కిందరావటమున్ను వ్యవహారాలు ఏది విచారించినా ఒకదానికి ఒకటి సంబంధం లేకుండా ఉన్నందున అంతమట్టుకే చాలునని అదివరకు నడిచిన ఇస్తువులు అన్నీ పోగొట్టుకొని ఇంతమాత్రంతోనే శలవు తీసుకొని వచ్చేవరకు ఈ తాలూకా వ్యవహారం చేస్తూఉండే కానాలరెడ్డిగారు స్థలం ఇవ్వక హుజూరుఫర్మానా విముఖాయించి నడచినమీాదను మనజాగాకు వచ్చి మనముననే చెట్లుపట్టించేయోచన చేసెను. మనము ఒకరిసామ్ముకు పోయినవారము గాము. చేతకాక పోయి సర్కారుతో ఏమని చెప్పుకోవలసినది. మనపెద్దలు నడచిన సంగతులున్ను వారు సర్కారులో సంపాద్యం చేసుకొన్న అంతఃకరణ కున్ను ఇపుడు ఎందులో జమలేకుండా పోయెను. అని ఉత్తరం వ్రాసి మూాల్వారు చిటి వీరరాజుకు గోలుకొండకు పంపిస్తే హుజూరునుంచి కానాలరెడ్డికి ఒకతాఖీదున్ను చెన్నపనాయనికి పురుషోత్తమనాయనిం గారిపేరను మీా తాలూకాకు ఒకరు రావలసిన నిమిత్తం ఏమున్నది! బాగా సతాయించి తీసుకొమ్మని హుకుంను శలవు ఇచ్చిన తర్వాత వీరుభయులున్ను సకలవిధాల శ్రమపడి కానాలరెడ్డిగారిని వదలించి తమరు ఈ గ్రామాదులు ప్రభుత్వం చేసుకున్న గ్రామాదుల పేర్లు వయినం.

దూపాటి తాలూకాలో ఉండే గ్రామాదులు

దోరణాల	బలిజపల్లె
తిమ్మాపురం	చెర్లోపల్లె
గుడిపాడు	చింతలముదివి
జమ్మిదారణాల	కామపాక...
